**தலைப்பு 120 – மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 120 மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 23 ஆம் திகதி மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சுக்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 5,044.39 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 4,157.86 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 886.53 மில்லியன் அதாவது 17.57 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டுவருவவை | 4,379.69 | 3,717.62 | 662.07 | 15.12 |
| மூலதனம் | 664.70 | 440.24 | 224.46 | 33.77 |
| மொத்தம் | 5,044.39 | 4,157.86 | 886.53 | 17.57 |

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 12001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 40.00 | 25. 70 | 17.00 | 19.71 | 85.00 | 63.81 |

2.3 கணக்காய்வு அவதானிப்பு

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மேலும் ஒரு பதிவேடு முறைப்படி மற்றும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | தொடர்புடைய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | சேதங்கள் பற்றிய பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.2.1 பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 12 செலவு விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 174,772,190 இற்கான மொத்தத் தேறிய ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 16 செலவு விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்புக்கள் தேறிய ஏற்பாடுகளில் 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை வீச்சு அளவினை கொண்டிருந்தது.

### 3.3 கட்டு நிதிக் கணக்கு

2015 ஜுலை 14 திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்று நிருபத்தினால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணங்கள் 371(5) இன் பிரகாரம் கருமம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் பெற்றிருந்த செயல்நிமித்த துணை கட்டு நிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 71 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 1,169,771 கூட்டுத்தொகையான செயல் நிமித்த கட்டு நிதிகளைத் தீர்ப்பதற்காக, கருமம் முடிவடைந்து 01 மாதம் முதல் 09 மாதங்கள் வரையான கால வீச்சொன்றினை பெற்றிருந்தது.எடுக்கப்பட்டிருந்தது.

### 3.4 நள்ளாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

#### 3.4.1 வருடாந்தப் பெறுகைகள் திட்டம்

அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 305 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ் ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆந் திகதிய இலக்கம் 128 கொண்ட தேசிய பாதீட்டு சுற்று நிருபத்தின் பந்தியின் பிரகாரம் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படும் காலப் பகுதி தொடர்பாக விரிவாகத் தயாரிக்கப்பட்ட பெறுகைகள் கால அட்டவணையொன்று காணப்படவில்லை. அத்துடன் பெறுகைகள் திட்டத்தில் ஆண்டு பூராகவும் தேவையின் அடிப்படையில் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டிருந்தது. எவ்வாறாயினும், அமைச்சு மீளாய்வாண்டின் போது மேற்கொண்டிருந்த கொள்வனவுகளில் ரூபா 9,660,471 இற்கான கொள்வனவுகள் நவம்பர் மற்றும் திசெம்பர் இரண்டு மாதங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

#### 3.4.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு நோக்கெல்லை சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சு, நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களம், சிறுவர் அபிவிருத்தி நிதியம், சிறுவர் செயலகம், மகளிர் பணியகம், மகளிர் குழுக்கள் ஆகிய அலுவலகங்கள் கணக்காய்வில் அடங்கியிருந்த போதிலும், இந்த பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக பிரதான அகக் கணக்காய்வாளருடன் நான்கு பேர்களைக் கொண்ட பதவியணியினர் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் தவிர ஏனைய மூன்று பேரும் கணக்காய்வு அலுவல்கள் நிறைவேற்றுவதற்கான போதியளவு தகைமைகளைக் பெற்றிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் உளதாய் இருந்தலை பாதிக்கும் சட்ட வரம்புக்குள் செயற் திறமையான உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பு ஒன்றினை அமைப்பதற்கும் குறிக்கோளுடனான ஒட்டுமொத்த செயற்பாடுகளினதும் செயலாற்றுகை ஒன்றினை ஏற்படுபத்துவது முகாமையின் முக்கிய பொறுப்பாக காணப்பட்டதுடன் அதற்கு உதவுவதற்காக தேவையான செயல்முறை ஒன்றினை தயாரித்து அதற்கான பொறுப்பினை உள்ளகக் கணக்காய்விற்கு சாட்டுதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் முகாமையினால் இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) 2009 ஜுன் 09 திகதிய DMA/2009/1 ஆம் இலக்க கொண்ட முகாமைத்துக் கணக்காய்வு சுற்று நிருபத்தின் பந்தி 7 இன் பிரகாரம் அமைச்சில் மற்றும் அதன் கீழ் காணப்படும் 06 நிறுவனங்களின் அனைத்து கட்டுப்பாட்டு மற்றும் முறைமைகள்

அடங்கும் விதமாக உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. மிகவும் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகள் அடங்கும் விதமாக திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 73.59 மில்லியன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த 07 முக்கிய விடயங்கள் தொடர்பாக போதியளவு கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வு பிரிவு 22 கணக்காய்வு அறிக்கைகள் வழங்கியிருந்தது. அவற்றில் 13 இற்கு மாத்திரம் முகாமை பதில் அனுப்பியிருந்தது. 9 அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டியிருந்த விடயங்கள் தொடர்பாக முகாமை கவனம் செலுத்தியிருக்கவில்லை. பதில் அனுப்பியிருந்த கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டியிருந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அமைச்சினால் கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும், அவ் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

2004 மே 12 திகதிய 04/0427/020/002 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உட்பட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக கருமங்கள் அரச ஊடக நிறுவனங்கள் மூலம் செய்யப்பட வேண்டும். எனினும், போஷாக்கு பொதி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உலக சிறுவர் தின வாழ்த்துக்களுக்காக செய்தித்தாள்களில் அறிவித்தலுக்காக ரூபா 2,079,257 தொகை ஒன்று செலுத்தி தனியார் ஊடக நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.6 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடு மற்றும் தொழிற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் பற்றிய அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) பிரதான குறிக்கோளுடன் தொடர்புடைய கருமங்களில் இருந்து விலகிச் செயற்படல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நள்ளாளுகை பயன்பாடுகளை உறுதிப்படுத்தும் முகமாக தொடர்புடைய தேவைகளை வழங்குதல் மற்றும் கொள்கைகள் தயாரித்தல், அமுல் நடத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தல் அமைச்சின் பணி எனினும், சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளை உறுதிப்படுத்தல், பாதுகாத்தல், மேம்படுத்தலுக்காக உருவாக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட கொள்கைகளை வலுப்படுத்தி அமுல் நடத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சர்வதேச மகளிர் தின தேசிய விழாவின் நினைவு கூறல், பிரதேச செயலகங்களின் மூலம் அறிவுரை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள், ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள், மகளிர் தினத்திற்காக கொடிகளை வடிவமைத்தல்,

மகளிர் பணியகத்தினால் மகளிர் தினத்தை நினைவு கூறல் மற்றும் சர்வதேச மகளிர் தினத்தின் பிரதான விழாவினை நடாத்துதல் ஆகிய விடயங்களின் கீழ் ரூபா 15.87 மில்லியன் கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் அவற்றில் ரூபா 11.148 மில்லியன் அனுராதபுரம், கிளிநொச்சி மற்றும் பிரதேச செயலகங்களில் விழாக்கள் நடாத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. அந்த பணம் மகளிர் எதிர்நோக்கும் பாரதூரமான சமூகம் சார் மற்றும் பொருளாதாரம் சார் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக நின்று நிலைக்கக் கூடிய உபாய முறைகளை அறிமுகப்படுத்தி செயற்படுத்துவதற்காக செலவிடக் கூடியதாக இருந்தது. மேலும் சர்வதேச மகளிர் தின உத்தியோகபூர்வ விழாவை அனுராதபுரத்தில் நடத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக பங்குபற்றுவோர் எண்ணிக்கை மற்றும் விழா வளவு, கடைகள், மேடைகள் அமைக்கப்பட வேண்டிய அமைப்பு பற்றி முறையாகத் திட்டமிடப்படாமையால் உடன்பட்டிருந்த கூறுவிலைகளை மிகைத்து ரூபா 771,890 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அதே போல் உணவு, மற்றும் குடிபானங்களுக்காக ரூபா 736,685 தொகையும் செலுத்தியிருந்தது.

**(ஆ) போதியளவினதாக மேற்கொள்ளப்படாத பிரதான கருமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சு, லமா ஸவிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 15 மில்லியன் ஏற்பாடு செய்திருந்த போதிலும் அதற்காக ரூபா 16.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. உலக சிறுவர் தின கொண்டாட்டத்திற்காக ரூபா 7.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 6.17 மில்லியன் விழா ஒருங்கமைப்பு, பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடுதல், நடனக் குழு மற்றும் ஏனைய பலவினச் செலவுகளுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. சிறுவர்களுக்கு பரிசுகள் வழங்குவதற்காக சுமார் ரூபா 0.61 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

(ii) மகளிர் இம்சைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இன்றிய சமூகமொன்றினை ஏற்படுத்துதல் அமைச்சின் மூலம் எதிர்ப்பார்த்த பெறுபேறாகக் காணப்பட்ட போதும், 2015 ஆண்டின் போது பத்திரிகைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த சிறுவர்கள் மற்றும் மகளிர் முகங்கொடுத்துள்ள மகளிர் இம்சைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக சம்பங்களின் எண்ணிக்கை 818 கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. அந்த சம்பவங்கள் தொடர்பாக அமைச்சு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

**(இ) பெண்களுக்கு மற்றும் பெண் பிள்ளைகளுக்கு ஏற்படும் அனைத்து விதமான வன்முறைகளை தடுத்தல் மற்றும் முளையில் கிள்ளி எரிதல்**

மேற்கூறிய தொனிப்பொருளில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி கேந்திர உதவி அலுவலர்கள் 37 பேரும் 37 அமைச்சர்களுக்கு இணைக்கப்பட்டு அவ் அமைச்சுக்களில் சேவையாற்றும் அலுவலர்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு நேரிடக் கூடிய துஷ்பிரயோகங்களை இம்சைகள் மற்றும் ஆண் பெண் சமூக அமைப்பு தொடர்பாக உணர்வை ஏற்படுத்துவதற்காக 100 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தி 10,000 நலன்பெறுவோர்களை அறிவுறுத்துவதற்காக ரூபா 4 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் நடவடிக்கை ஏதும் மேற்கொண்டிருக்கவில்லை. அத்துடன் அமைச்சினால் அவ் அலுவலர்களுக்கு 2015 ஆண்டிற்கான சம்பளங்கள் மற்றும் படியாக ரூபா 24,140,162 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு இணைக்கப்பட்ட 31 உத்தியோகத்தர்கள் 2016 ஏப்ரல் மாதம் அளவில் வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றும் மற்றும் வேறு தொழில்கள் பெற்றும் சென்றுள்ளனர். அவ் அலுவலர்களில் அவ்

அமைச்சுக்களில் தற்போது மீதியாக இருக்கும் 06 அலுவலர்களுக்கு சாட்டப்பட்டிருந்த கருமங்களை நிறைவேற்றியிருக்கவில்லை. அத்துடன் அமைச்சு மற்றும் அந்த அலுவலர்களிடையே சிறந்த கூட்டிணைப்பு ஒன்று காணப்படவில்லை.

**(ஈ) நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்துதல்**

கர்ப்பிணித் தாய்மாருக்கு போசாக்குப் பொதி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 2,500 மில்லியனும் பால் குவளை நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 260 மில்லியனும் ஆக நலன்புரி விடயங்களுக்காக ரூபா 2,760 மில்லியன் இற்கான நிதி ஏற்பாடுகள் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) கர்ப்பிணித் தாய்மாருக்கு போசாக்குப் பொதி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்**

போசாக்குப் பொதி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,500 மில்லியன் ஏற்பாடுகள் தவிர ரூபா 500 மில்லியன் மேலதிக ஏற்பாடு ஒன்றினை பெற்றிருந்ததுடன் அவற்றில் ரூபா 2422 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. போசாக்கு பொதி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிக்கும் விழாக்கள் 04 ஐ நடத்துவதற்காக ரூபா 7.00 மில்லியனும், பத்திரிகை அறிவித்தல் பிரசுரிப்பதற்காக ரூபா 1.93 மில்லியனும் அழைப்பிதழ் மற்றும் போஸ்டர்கள் அடிப்பதற்காக ரூபா 0.41 மில்லியனும், செலவிடப்பட்டிருந்தது.

**(ii) பால் குவளை நிகழ்ச்சித் திட்டம்**

பால் குவளை நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 260 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவற்றில் ரூபா 39.39 மில்லியன் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. ரூபா 31.78 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 188.82 மில்லியன் இதற்காக செலவிடப்பட்டுள்ளது. 2 வருடங்களை விட கூடிய சிறுவர்களின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்துவதற்காக போசாக்குள்ள வளர்ந்தோர் உணவு வகைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் எனவும் 100 மில்லிலீற்றர் பாலுக்கு 87.5 மில்லி கிராம் நீர் என தாய்மார் மற்றும் சிறுவர் சுகாதார பணிப்பாளரினால் சுட்டிக் காட்டியிருந்ததுடன் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் நடத்தும் போது பல நடைமுறை சிக்கல்கள் முகங்கொடுக்க வேண்டி நேரிட்டிருந்தமையால் எதிர்ப்பார்த்த போசாக்கு மட்டம் உயர்த்துதல் நடைபெற்றிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2016 ஆண்டின் போது தொடர்ந்தும் இந்த நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

**(iii) சுழற்சி கடன் நிகழ்ச்சித் திட்டம்**

இலங்கை மகளிர் பணியகத்தின் மூலம் 1990 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை ரூபா 93 மில்லியன் வழங்கப்பட்டு 304 பிரதேச செயலக வட்டாரங்களில் செயற்படுத்தியிருந்த சுழற்சி நிதி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 151 வட்டாரங்கள் தொடர்பான விபரங்கள் மாத்திரம் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ் வட்டாரங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 43,307 மில்லியன் தொகையில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அக் கணக்குகளில் ரூபா 46.96 மில்லியன் காணப்பட்டது. இந்த அளவான மீதி ஒன்று காணப்பட்டமையால் இந்த நிகழ்ச்சித்திட்டம் சுழற்சி கடன் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாகச் செயற்பட்டிருக்கவில்லை எனவும் 06 வட்டாரங்களில் நிகழ்ச்சித் திட்டம் செயற்பட்டிருக்கவில்லை. எனினும் 7 பிரதேச அலுவலகங்களுக்கு

வழங்கியிருந்த ஏற்பாடுகளில் கூட்டுத்தொகை ரூபா 1.6 மில்லியன் அவ் வட்டாரங்களுக்கு கிடைத்திருக்கவில்லை எனவும் சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. 14 வட்டாரங்களில் 95 கடன்பட்டோர்கள் ரூபா 0.94 மில்லியன் திருப்பிச் செலுத்தத் தவறியிருந்தனர்.

### 3.7 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் நிறைவேற்றப்பட்டிருந்த சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல் ஒன்று தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. விவரங்கள் கீழ்வருமாறு

அம்பாறை, திருகோணமலை மற்றும் வட மாகாணத்தில் சேவைகளை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 170 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்தப் பணம் முழுவரும் சேமிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட போது இந்த செயற்திட்டம் அமைச்சின் நோக்கெல்லையில் அடக்கும் கருமம் ஒன்று அல்ல எனவும் 2015 ஜூன் 23 திகதிய இலக்கம் WA/04/02/01/2015 கொண்ட கடிதத்தின் மூலம் வெளிநாட்டு வள திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடம் அதற்கான அறிவுரைகளை கோரியிருந்த போதிலும் அதற்கான பதில் அனுப்பியிருக்கவில்லை எனவும் அறிவித்திருந்தார்.

### 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையான தன்மையை விட்டு விலகியிருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

#### அரச பெறுகைகள் வழிகாட்டல் நடைமுறையில் இருந்து விலகுதல்

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் ஒப்பந்தப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் செத்சிரபாய கட்டடத்தில் அமைச்சினை நிறுவும் போது மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் மாடிகளில் பிரிவுகள் (Portion) ஒதுக்கும் போது காபட்கள் போடுதல் வேலைகளுக்காக கூறுவிலை கோரப்படாமல் கட்டிட வேலை திணைக்களத்திற்கு ஒப்பந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருந்தது. கட்டிட வேலைத் திணைக்களத்துடன் உடன்படிக்கை ஒன்று கையொப்பமிட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 45,534,720 இற்கான மதிப்பீட்டுக்காக (BOQ) அளவைப் பத்திரம் சமர்ப்பித்திருக்கவில்லை. கோவையில் காணப்படும் தகவல்களின் பிரகாரம் செலவுகளின் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 37,932,224 தொகை எனினும் கட்டிட வேலைத் திணைக்களத்திற்கு 08 சந்தர்ப்பங்களில் ரூபா 52,926,670 கூட்டுத்தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மதிப்பீட்டை மிகைத்து ரூபா 14,994,446 தொகை செலுத்தப்பட்டுள்ளது.

### 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மகளிர் இம்சைகள் தொடர்பாக, தோட்டத்துறையைச் சேர்ந்த 5467 நலன்பெறுவோரை அறிவுறுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களும், சிறு தாய்மார் உருவாவதை தடுப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2.82 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. சிறு தாய்மார் தொடர்பாகவும், ஸய்பர் குற்றவியல், மகளிர் இம்சைகள் பற்றி மற்றும் தோட்டப் பகுதியில் பெண்களுக்கு நேரிடும் இம்சைகள் ஆகிய 03 ஆய்வுகள் மேற்கொள்வதற்காக ரூபா 3.65 மில்லியன், கூட்டுத்தொகை 02 தனியார் நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த ஆய்வுகளுக்காக தேவையான

தரவுகள் அமைச்சின் 1938 மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 1929 சேவைகளில் இருந்தும் அமைச்சின் அலுவலர்களான பெண்கள் அபிவிருத்தி அலுவலர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்கள் மற்றும் நன்னடத்தை அலுவலர்கள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களின் அலுவலர்களிடம் இருந்தும் பெற்றிருந்தனர். அதே போல் தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் மாற்று வழிகள் கடைபிடிக்கப்பட்டன எனவும், அரச நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய தகவல்கள் அமைச்சின் தலையீட்டில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உடன்படிக்கையின் பிரகாரம் இந்த ஆய்வு அறிக்கைகளை குறிப்பிட்ட நாளில் சமர்ப்பிக்கத் தவறும் இடத்து இணங்கிய தொகையில் ஒரு குறிப்பிடப்பட்ட தொகை குறைப்பது என இருசாராரும் இணங்கி உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது கணக்கிடப்படும் முறை பற்றி தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது ஆய்வு அறிக்கை சமர்ப்பிப்பதாக குறிப்பிடப்பட்ட தினத்திற்கு ஒரு மாதத்திற்கு பின்னர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இவ் ஆய்வு அறிக்கையை பரிசோதனை செய்யும் விடயம் மீளாய்வாண்டு இறுதி வரை நடைபெற்றுக்கொண்டிருந்தது. அத்துடன் அவ் அறிக்கைகளில் விதப்புரைகளை செயற்படுத்துவது தொடர்பாகவும் 2015 திசெம்பர் 31 திகதி வரை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2015 ஜுன் 10 திகதி அமைச்சுக்கு சொந்தமான வாகனம் ஒன்றிற்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக ரூபா 5,069,907 இற்கான சேதம் ஒன்று ஏற்பட்டிருந்தது. 2016 ஜுலை 12 திகதியன்று விபத்து ஏற்பட்டு ஒரு வருடத்தை மிகைத்திருந்த போதிலும் காப்புறுதி நட்டஈடு வழங்குவதற்கு காப்புறுதி நிறுவனம் இணங்கியிருக்கவில்லை. அத்துடன் நிதிப் பிரமாணங்கள் 104(4) இன் கீழ் நட்டம் ஒன்று தொடர்பாக இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அங்கு பொறுப்புக் கூற வேண்டிய அலுவலர்களிடன் அறவிடப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட தொகை மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட தொகை மற்றும் அறவீடு செய்யக் கூடிய தொகை என்பன குறிப்பிட்டிருக்கவில்லை.

### 3.11 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 29 | 25 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 17 | 11 | 06 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,435 | 1,097 | 338 |
| (iv) | ஆரம்ப நிலை | 79 | 69 | 10 |
| | மொத்தம் | 1,560 | 1,202 | 358 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள பெண்கள் அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் ஆலோசனை உதவி அலுவலர்கள் 338 வெற்றிடங்கள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தற்போது சேவையில் இருக்கும் 1097 அலுவலர்களின்ரால் மேற்கொள்ளப்படும் விடயங்கள் தொடர்பாக மாவட்ட அலுவலர்களின் மூலம் மாதாந்த முன்னேற்ற அறிக்கை முறைப்படி அமைச்சிற்கு

தருவிக்கப்பட்டு பின் தொடர் நடவடிக்கை மற்றும் மேற்பார்வையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும் அனுப்பப்பட்டிருந்த செயல் முன்னேற்ற அறிக்கைகளிலும் போதியளவு விடயங்கள் குறிப்பிடப்படாதிருந்தமை எனவும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) அமைச்சில் 4 சிரேஷ்ட மட்ட அலுவலர்கள் மற்றும் 06 மூன்றாம் நிலை அலுவலர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டமையால் பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் அமைச்சின் விடயங்கள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சிறுவர் அபிவிருத்தி நிதியம், சிறுவர் செயலகம், மகளிர் பணியகம், மகளிர் குழுக்கள் அபிவிருத்தி பகுதியின் விடயங்கள் தொடர்பாக திட்டமிடல் மேற்பார்வை விடயங்கள் முறைப்படி மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததென அவதானிக்கப்பட்டது.